*1983 பிப்ரவரி 10]*

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, பதநீர் எடுக்கும் தொழிலாளர்கள் பதநீரை இறக்கி காய்ச்சி அதனை கருப்பட்டி ஆக்குகின்ற அந்த வேலை அவர்களுக்கு மிகவும் கடின மான வேலையாகும். கருப்பட்டியினுடைய விலையும் குறைவான தாகும். விறகு கிடைப்பதும் பற்றாக்குறையாக இருக்கிறது. விற கினுடைய விலையும் அதிகமாக உள்ளது. அவர்கள் காய்ச்சும் கருப்பட்டிக்கு போதுமான விலை கிடைக்கவில்லை. ஆகவே, ஏதாவது ஒரு கிராமத்தை முன் உதாரணமாக எடுத்து கொண்டு, 100 தொழிலாளர்கள் இறக்கும் பதநீரை ஒருங் கிணைத்து ஒரே இடத்தில் கொண்டு வந்து, மின்சாரம் தாராள மாகக் கிடைக்கின்ற நேரத்தில், மின்சாரத்தைப் பயன்படுத்தி கருப்பட்டியை தயார் செய்தால், மிகக் குறைந்த செலவில் அதனை உற்பத்தி செய்ய முடியும். அந்த வகையில் அதனை அமுல் நடத்த அமைச்சர் அவர்கள் முன் வருவாரா? அந்த வகை யில் அமுல் நடத்துகிற நேரத்தில், அந்தப் பனை ஏறும் தொழி லாளர்கள் மாநிலத்தில் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அந்த இடங்களில் எல்லாம் இந்தத் திட்டத்தை அறிமுகம் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2, 3 கேள்விகளை இணைத்து ஒரே கேள்வியாக கேட்டிருக்கிறார்கள். பனை ஏறும் தொழிலா ளர்களின் சிரமங்களை குறைத்து, அவர்களுடைய வேலையை சுலபமாக்கும் வாயிலாகத்தான் மாவட்டம்தோறும், பல்மைரா காம்பிளக்ஸ் எனப்படும் தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இதனால் அவர்களுடைய வேலை வாய்ப்பு பாதிக்கக் கூடிய நிலை இல்லை. மற்றபடி மாண்புமிகு உறுப்பினர் அவர் கள், ஒரு கிராமத்தை உதாரணமாக எடுத்துக் கொண்டு இதனைச் செயலாற்ற வேண்டும் என்று சொன்னார்கள். இது சம்பந்தமாக நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூரில், அந்த இடத்தைச் சுற்றி பனைமரங்கள் அதிகமாக இருப்பதைக்கருதித்தான் அதனை முன் உதாரணமாக கிராமமாக எடுத்துப் பரிசீலனை செய்வதற் கான ஏற்பாடுகளை, அதிகாரிகள் அங்கே செய்து கொண்டிருக்கி றார்கள். அது நடைமுறைப்படுத்தவிருக்கிறது என்பதை தெரி வித்துக் கொள்கிறேன்.

## முசிறி, துறையூ , லால்குடி பகுதிகளுக்கு தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தை விஸ்தரிக்கும் திட்டம்

*வினா எண். 157—திரு. எம். கே. ராஜமாணிக்கம் : மாண்பு மிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறி, துறையூர், லால குடி பகுதிகளுக்கு தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டத்தை விஸ்தரிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில் விஸ்தரிப்பு அலுவலகங்கள் எங்கு நிறுவப் படும்?

(இ) மதுரையில் உள்ளது போல் 100 கிளை நிலையங்கள் கொண்டதாக திருச்சிராப்பள்ளித் திட்டம் மாற்றப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :

(அ) லால்குடி பகுதியில் ஏற்கனவே தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் செயல்பட்டு வருகிறது. முசிறி மற்றும் துறையூர் பகுதிகளுக்கு விஸ்தரிக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

(ஆ) எழவில்லை.

(இ) 50 கிளை நிலையங்கள் கொண்ட தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் சீராக இயங்குவதால், 100 கிளை நிலையங்களாக மாற்றும் உத்தேசம் இல்லை.

## செங்கை மாவட்டத்திலுள்ள கோழிப் பண்ணைகள்

*வினா எண். 158— திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டத்தில் எத்தனை கோழிப்பண்ணைகள் உள்ளன ?

(ஆ) காஞ்சீபுரத்தில் கோழிப்பண்ணை ஒன்று நிறுவும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) செங்கை மாவட்டத்தில் கால்நடை பராமரிப்பு துறையின் பொறுப்பில் இரண்டு கோழிப்பண்ணைகளும், தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் பொறுப்பில் கோழிப்பண்ணை ஒன்றும் மற்றும் கோழி வளர்ப்பு நிறுவனத்தின் உதவியுடன் சிறப்புக் கால்நடை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 536 சிறு கோழிப்பண்ணைகள் இயங்கி வருகின்றன.

(ஆ) மற்றும் (இ) தற்சமயம் ஏதும் இல்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகரமான காஞ்சிமாநகரில் பலர் இந்தக் கோழிப்பண்ணை ஆரம்பிக்க விரும்புகிறார்கள். அவ்வாறு ஆரம்பிக்க இருக்கின்ற பண்ணைகளுக்கு என்னென்ன வகையில் அரசு உதவி செய்ய இயலும் என்பதை அறிய விரும்புகிறேன்.